# 40 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி!

# ரூ.1185 கோடியில் மகளிர்க்கு புதிய வேலைவாய்ப்புத் திட்டம்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - மானியக் கோரிக்கை பதிலுரையில் அடுக்கடுக்கான அறிவிப்புகள்!

**சென்னை, ஜூன் 29-**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை உள்ளிட்ட தமது துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், "40 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி, ரூ.1,185 கோடியில் மகளிர்க்கு புதிய வேலைவாய்ப்புத் திட்டம்" என, ஏராளமான முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார்.**

**சட்டப்பேரவையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு:**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள் துறையைச் சார்ந்த அறிவிப்புகளை உங்கள் அனுமதியோடு வெளியிடுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### அறிவிப்புகள்

#### சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

1.தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட இருக்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க அனைத்து மாவட்டங்களிலும் ஒரு மாவட்ட திறன் மையம் உருவாக்கப்படும்.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கீழ் அமைக்கப்படும் மாவட்ட திறன் மையத்தில், நான் முதல்வன் திட்டம் தொடர்பான நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஒரு திறன் மேம்பாட்டு அலுவலர், இளம் வல்லுநர்கள் மற்றும் இல்லம் தேடி கல்வி திட்டத் தன்னார்வலர்கள் கொண்ட குழு செயல்படும். இதே போன்று தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கும் நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஒரு மாவட்ட திட்ட அலுவலர், இளம் வல்லுநர்கள் மற்றும் இல்லம் தேடி கல்வி திட்டத் தன்னார்வலர்கள் கொண்ட குழு செயல்படும்.

2.அரசின் முக்கிய திட்டங்களைக் கண்காணிக்க மாவட்ட அளவில் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கண்காணிப்பு அலகு உருவாக்கப்படும்.

அரசின் முக்கிய திட்டங்களைக் கண்காணிக்க, மாவட்ட அளவில் ஏற்படுத்தப்படும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கண்காணிப்பு அலகு தலா ஒரு புள்ளி இயல் அலுவலர் மற்றும் புள்ளி இயல் ஆய்வாளர் கொண்டு அந்தந்த மாவட்ட புள்ளி இயல் துணை இயக்குநர் கீழ் செயல்படும்.

இந்த அலகு மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களோடு இணைந்தே செயல்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3.வேலைவாய்ப்பினை எதிர்நோக்கும் தமிழ்நாட்டு இளைஞர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு "திறன்ஓலைகள்" (Skill Vouchers) மற்றும் பணியிடப் பயிற்சி (Internship) வழங்கும் "திறன்தமிழ்நாடு-நிறைபள்ளிகள்" (TN Skills-Finishing Schools) என்ற திட்டம் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் முதல்வன் திட்டத்தின் தொடர்ச்சியாக, கல்லூரி பட்டப் படிப்பை முடித்த வேலை தேடும் இளைஞர்களுக்கு அவர்களின் பட்டப்படிப்பு, தனித்திறன்கள் மற்றும் ஆர்வங்களுக்கு ஏற்ப திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை அணுகுவதற்கு "திறன்தமிழ்நாடு-நிறைபள்ளிகள்" (TN Skills-Finishing Schools) என்ற மாபெரும் திட்டம் துவங்கப்படும். பயிற்சியின் முடிவில் பணியிடப் பயிற்சி (Internship) மற்றும் வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்படும்.

சர்வதேச சான்றிதழ் மற்றும் தொழில்துறை அங்கீகாரத்துடன் திறன் அடிப்படையிலான படிப்புகளை வழங்கச் சிறந்த நிறுவனங்கள், தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இந்த தொழில் நிறுவனங்கள் இளைஞர்களுக்கு முழு மற்றும் பகுதி அளவு மானியத்துடன் கூடிய திறன் ஓலைகளை வழங்கும். பின்தங்கிய இளைஞர்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் திறன் ஊக்கத் தொகையினையும் வழங்கும்.

4.நான் முதல்வன் திட்டத்தின் திறன் சார்ந்த படிப்புகள் 45,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில் துணை மருத்துவ படிப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பொறியியல், கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக் மற்றும் அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கான நான் முதல்வன் திறன் சார்ந்த படிப்புகள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, நான் முதல்வன் திறன் அடிப்படையிலான படிப்புகளைத் துணை மருத்துவ படிப்புகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

5.நான் முதல்வன் திட்டத்தின் மூலம் கிராமப்புறம் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் வசிக்கும் சிறந்த 1,000 மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குத் திறன் பயிற்சி அளித்து உயர் வேலைவாய்ப்புகளை உருவாக்கித்தர "சிகரம்தொடு" என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் கிராமப்புறம் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் வசிக்கும் சிறந்த 1,000 மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குத் திறன்பயிற்சி அளித்து உயர் வேலைவாய்ப்புகள் உருவாக்கித் தரப்படும். மாணவர்கள் தகுதித் தேர்வில் அவர்களின் செயல்திறன் அடிப்படையில் அடையாளம் காணப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் தொடர்ந்து பல்வேறு துறை சார்ந்த திறன்கள் மற்றும் அனுபவரீதியான செயல் இலக்குகள் மூலம் மேம்படுத்தப்படுவார்கள். இவர்களுக்குச் சிறந்த தொழில்முறை பயிற்றுனர்கள் மூலமாகப் பயிற்சி அளிக்கப்பட்டு உயர்தர படிப்புகளைப் படிப்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்படும்.

6.நமது திராவிட மாடல் அரசின் முக்கிய குறிக்கோளான 2030-ல் ஒரு டிரில்லியன் அமெரிக்கன் டாலர் இலக்கை எட்டுவதற்கு பெண்களின் பங்கு மிக முக்கியமானதாகும். எனவே, பெண்கள் முறைசார்ந்த தொழில்கள் மற்றும் உயர்தர பணிகளில் ஈடுபடுவது அவசியமானதாகும். இதற்காக தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு என்ற புதிய திட்டம் உலக வங்கியின் உதவியுடன் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். இத்திட்டம் அடுத்த 5 ஆண்டுகளுக்கு (2024-2029) 1185 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இதில் இவ்வாண்டு 168 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் சிறப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.



i. மாவட்டங்களில் உள்ள பெண்களின் திறமைகளைக் கண்டறிந்து அதற்கேற்ப மகளிருக்கான தரமான வேலைவாய்ப்புத் திட்டம் உருவாக்கப்படும். முதற்கட்டமாக 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

ii. மகளிருக்குப் பயனளிக்கக்கூடிய திறன் மேம்பாடு, தொழில் முனைவோர், உளவியல் கலந்தாய்வு, வேலை வாய்ப்பு தொடர்பான விவரங்கள், பெண்களின் பணியிட பாதுகாப்பு தொடர்பான அனைத்து தகவல்களையும் ஒரே இடத்தில் அளிக்கும் வகையில் மகளிர் தகவல் வங்கி உருவாக்கப்படும்.

iii அரசுப் பள்ளிகளில் 8 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகள் தங்களுக்கு ஏற்றப் பணியினை தேர்ந்தெடுப்பதற்காக உளவியல் பரிசோதனை (Psychometric Test) மூலம் அவர்களது திறமைகளைக் கண்டறிய 'திறமை மதிப்பீட்டு தளம்' (Talent Assessment Platform) உருவாக்கப்படும்.

iv. தமிழ்நாட்டில் பெண்களைத் தொழில் முனைவோர்களாக்க பள்ளி பருவத்திலேயே மாணவிகளுக்குக் கற்பிக்கும் பொருட்டு, பள்ளிகளில் தொழில்முனைவு குறித்த பாடத்திட்டம் (Earlypreneurship Programme) இவ்வாண்டு முதல் சேர்க்கப்படும்.

v. வகுப்பறைக் கற்றலுக்கும் நடைமுறைச் செயல்பாடுகளுக்கும் இடையேயான இடைவெளியைக் குறைக்க, அரசுக் கல்லூரிகளில் இறுதியாண்டு படித்து வரும் மாணவிகளுக்குத் தொழில் துறை சார்ந்த உள்ளுரை பயிற்சி (Internship Training) அளிக்கப்படும்.

vi. தமிழ்நாட்டில் உள்ள 10 மகளிர் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் (ITI), 4 மகளிர் பல்வகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnic) 4,000 மாணவிகள் பயன்பெறும் வகையில் STEM (Science Technology Engineering & Mathematics) மையங்கள் உருவாக்கப்படும்.

vii. பெண் தொழிலாளர்கள் பணிபுரியும் இடங்களில் "மாதிரி மழலையர் காப்பகங்கள்" (Model Creche cum After School care) மற்றும் வீட்டில் தனியாக இருக்கும் முதியோர்களை பராமரிக்கும் வகையில் "முதியோர் சமூக மையங்கள்" (Elderly Community Hubs) உருவாக்கப்படும்.

#### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

1.7,000 சுய உதவிக் குழுக்களுக்கு 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.

சுய உதவிக் குழுக்கள் மற்றும் அதன் உறுப்பினர்கள் தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக சமுதாய முதலீட்டு நிதியை பொருளாதார கடன் உதவியாக வழங்கப்படும். இந்த ஆண்டு 7,000 சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலமாக சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும். இதற்காக மொத்த தொகை 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. 40,000 கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் சுய வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி 90 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)




திறன் பயிற்சியானது கிராமப்புற இளைஞர்களின் திறனை மேம்படுத்தி வேலைவாய்ப்பு பெறுவதற்கான தகுதியை உருவாக்கி வேலைவாய்ப்புகளை உறுதி செய்கிறது. இந்த ஆண்டு 10,000 கிராமப்புற இளைஞர்களுக்கு 60 கோடி ரூபாய் செலவில் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி வழங்கப்படும். மேலும், சுய தொழிலை ஊக்குவிக்கும் வகையில் 30,000 இளைஞர்களுக்கு 30 கோடி ரூபாய் செலவில் திறன் பயிற்சி அளிக்கப்படும்.

3. 4,000 தனிநபர் நிறுவனங்கள் மற்றும் 75 குழு நிறுவனங்களுக்கு இணை மானிய நிதி திட்டத்தின் மூலம் முறையான நிதி நிறுவனங்களிடமிருந்து 150 கோடி ரூபாய் (இதனில், 50 கோடி ரூபாய் இணை மானிய நிதியாக பயனாளிகளுக்கு வழங்கப்படும்) கடன் உதவி வழங்கப்படும்.

இணை மானிய நிதி திட்டம் (MGP), முதல் தலைமுறை தொழில்முனைவோர், பெண்கள் தலைமையிலான வணிகங்கள், நிறுவன குழுக்கள், தயாரிப்பாளர் கூட்டமைப்புகள், மாற்றுத்திறனாளிகள் தலைமையிலான நிறுவனங்கள் மற்றும் நிதித்துறைகளில் சவாலாகக் கருதப்படும் பிற வகை நிறுவனங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. இது கிராமப்புற தொழில்முனைவோருக்கு முறையான நிதிக்கான அணுகுதலை எளிதாக்குகிறது. கடன் தொகையில் 70% தொகையினை தவணை முறையில் திருப்பிச் செலுத்தினால், கடன் வாங்கியவர் 30% மானியத்திற்கு தகுதியுடையவராவர்.

2024-2025 ஆம் நிதியாண்டில், 4,000 தனிநபர் நிறுவனங்கள் மற்றும் 75 குழு நிறுவனங்களுக்கு வங்கிக்கடன் 150 கோடி ரூபாயிலிருந்து 50 கோடி ரூபாய் இணை மானிய நிதியாக வழங்கப்படும்.

4. ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் (சுமார் மூன்று இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரம் குழுக்களுக்கு) 30 கோடி ரூபாய் செலவில் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும்.

சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தகுதி மற்றும் திறமையை மேம்படுத்த அடிப்படை பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நிர்வாகம், நிதி மேலாண்மை மற்றும் தலைமைப் பண்பு ஆகியவற்றில் சிறப்பு புத்தாக்கப் பயிற்சி 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

5. 10,000 சுய உதவிக் குழுக்களுக்கு 10 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்படும்.

சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.10,000/- வீதம் அவர்களின் சேமிப்போடு, தொகுப்பு நிதியை அதிகப்படுத்தி கடன் இணைப்பு பெறுவதற்கு வழிவகுக்கும் வகையில் 10 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்படும்.

6. 7,500 தொழில் முனைவோர்களுக்கு ஐந்து கோடியே அறுபத்து இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ், சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் பயன்பெற்ற 7,500 தொழில் முனைவோர்களுக்கு ஐந்து கோடியே அறுபத்து இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.

7. "வானவில் மையம்" என்றழைக்கப்படும் பாலின வள மையமானது வட்டார அளவில் ஒரு மாவட்டத்திற்கு 3 மையங்கள் வீதம் 37 மாவட்டங்களில் 111 வானவில் மையங்கள் ஐந்து கோடியே ஐம்பத்தைந்து இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

சமூகத்தில் பின்தங்கிய மற்றும் வளரிளம் பெண்கள் உடல்நலம் மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதற்கு தீர்வு காணும் வகையில் "வானவில் மையம்" என்றழைக்கப்படும் பாலின வள மையமானது, வட்டார அளவில் ஒரு மாவட்டத்திற்கு 3 மையங்கள் வீதம் 37 மாவட்டங்களில் 111 வானவில் மையங்கள் ஐந்து கோடியே ஐம்பத்தைந்து இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும். ஊட்டச்சத்து, உடல் மற்றும் மன நலம், குழந்தை திருமணம், குடும்ப வன்முறை மற்றும் பாலியல் வன்கொடுமை போன்ற பெண்கள் தொடர்பான சமூகப் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி தீர்வு காண வழிவகை செய்யப்படும்.

8. சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பங்களில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் வளர் இளம் பெண்களுக்கு மாதவிடாய் கால சுகாதார மேலாண்மை குறித்த பயிற்சி 200 வட்டாரத்தில் உள்ள 6,083 ஊராட்சிகளில் நான்கு கோடியே அறுபத்தைந்து இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பங்களில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் வளர் இளம் பெண்களுக்கு மாதவிடாய் கால சுகாதார மேலாண்மை குறித்த பயிற்சி 200 வட்டாரத்தில் உள்ள 6,083 ஊராட்சிகளில் நான்கு கோடியே அறுபத்தைந்து இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அளிக்கப்படும். மேலும் ஊரகப் பகுதிகளில், பள்ளி மற்றும் கல்லூரிகளில் சுகாதார மேலாண்மை மன்றம் (Menstrual Hygiene Management Council) மற்றும் அறிவுசார்மையம் அமைக்கப்படும்.

9. அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும், சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கும், பெண்கள் தொடர்பான சமூகப் பிரச்சனைகளிலிருந்து பாதுகாப்பு சார்ந்த சட்ட விழிப்புணர்வு பயிற்சி மூன்று கோடியே இருபத்து நான்கு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அளிக்கப்படும்.

அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும், சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கும், பெண்களுக்கான சொத்துரிமை, குடும்ப வன்முறை மற்றும் பாலியல் வன்கொடுமை போன்ற பெண்கள் தொடர்பான சமூகப் பிரச்சனைகளிலிருந்து பாதுகாப்பு சார்ந்த சட்ட விழிப்புணர்வு பயிற்சி மூன்று கோடியே இருபத்து நான்கு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அளிக்கப்படும்.

10. பெண்கள் மற்றும் குழந்தைகளிடத்தில் சிறுதானியம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கத்தில் சிறுதானிய போட்டிகள் மற்றும் திருவிழாக்கள் ஒரு கோடியே எண்பது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செப்டம்பர் மாதத்தில் நடத்தப்படும்.

மக்களிடையே ஊட்டச்சத்தின் அவசியத்தை உணர்த்திடவும், பாரம்பரிய உணவு வகைகளின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையிலும் ஊட்டச்சத்து மிக்க உணவுகளை உட்கொள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளிடத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கத்தில் ஊராட்சி/வட்டாரம்/மாவட்டம் மற்றும் மாநில அளவில் உணவு/ சிறுதானிய போட்டிகள் மற்றும் திருவிழாக்கள் ஒரு கோடியே எண்பது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செப்டம்பர் மாதத்தில் நடத்தப்படும்.

11. சுய உதவிக் குழு மகளிர் விவசாயிகளால் உயர் மகசூல் தரும் கரும்பு இரகங்களின் பரு நாற்றுகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்திட, அலகுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் 50 அலகுகளுக்கு ஒரு கோடி ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மற்றும் வேலூர் மாவட்டங்களில் கரும்பு பயிரில் அதிக மகசூலை உறுதி செய்வதற்காக, தேர்வு செய்யப்பட்ட சுய உதவிக் குழு மகளிர் விவசாயிகளால் 50 அலகுகள் அமைக்கப்பட்டு உயர் மகசூல் தரும் கரும்பு இரகங்களின் பரு நாற்றுகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்திட, ஒரு அலகுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் 50 அலகுகளுக்கு ஒரு கோடி ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்படும்.

12. மாநிலம் முழுவதும், 50 மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் 50 இளைஞர் திறன் திருவிழாக்கள் 75 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டத்தின்கீழ் கிராமப்புற படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் பொருட்டு, தனியார் நிறுவனங்களுடன் இணைந்து அனைத்து மாவட்டங்களிலும் 50 மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் 50 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும். மேலும், பின்தங்கிய 50 வட்டாரங்களில் பல்வேறு திறன் பயிற்சித் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இளைஞர்கள் பயிற்சியில் சேர்ந்து பயன்பெறவும் 25 இலட்சம் ரூபாய் செலவினத்தில் இளைஞர் திறன் திருவிழாக்கள் நடத்தப்படும்.




13. பெருநகர சென்னை மாநகராட்சியில் 8 இடங்களில் 50 இலட்சம் ரூபாய் செலவில் மதி கஃபே (Mathi Cafe) அமைக்கப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின்கீழ் முன்மாதிரி அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் 8 இடங்களில் 50 இலட்சம் ரூபாய் செலவில் மதி கஃபே (Mathi Cafe) அமைக்கப்படும்.

14. 4,250 அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்திட சமையல் பொறுப்பாளராக தேர்வு செய்யப்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உணவு தயாரித்தல் பயிற்சி அளிக்கப்படும்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு காலை உணவு வழங்கிட, திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் உள்ள 4,250 அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கு காலை உணவுத் தயாரிக்க சுய உதவிக் குழு உறுப்பினர்களை தேர்வு செய்து 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பயிற்சி அளிக்கப்படும்.

15. மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய 25 அடுக்குமாடி குடியிருப்புகளில் (Apartment Bazaars) 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கண்காட்சிகள் நடத்தப்படும்.

சென்னை போன்ற பெருநகரங்களின் அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ள வாடிக்கையாளர்கள் மத்தியில் மகளிர் சுய உதவிக்குழு உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய மாவட்டத்திற்கு தலா 5 சமுதாய வளப் பயிற்றுநர்கள் உருவாக்கப்பட்டு, 25 அடுக்குமாடி குடியிருப்புகளில் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கண்காட்சிகள் நடத்தப்படும்.

#### இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

1. சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டின் சார்பாக பங்கேற்று வெற்றி பெற்ற குறைந்தது 100 வீரர் / வீராங்கனைகளுக்கு 3 சதவிகித விளையாட்டு இட ஒதுக்கீட்டின்கீழ் பணி ஆணை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்ற ஆண்டு 7 வீரர் /வீராங்கனைகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 100 வீரர் /வீராங்கனைகளுக்கு பணி ஆணை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, விளையாட்டுத்துறையினை மேம்படுத்திட பல்வேறு முயற்சிகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் சார்பாக சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று பதக்கம் வென்ற விளையாட்டு வீரர் வீராங்கனையர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் (PSUs) 3 சதவிகித விளையாட்டு இட ஒதுக்கீட்டின்கீழ் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 100 விளையாட்டு வீரர் வீராங்கனையர்களுக்கு அரசு துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட காலிப்பணியிடங்களில் அவர்களது சாதனைகள் மற்றும் கல்வித்தகுதியின் அடிப்படையில் பணி ஆணை வழங்கப்படும்.

2. டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் (மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி) ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தி, அனைத்து மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி ஆகிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் 33 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பு ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

3. முதலமைச்சருடைய mini stadium திட்டம்; திருவெறும்பூர், மன்னார்குடி, (மேசையைத் தட்டும் ஒலி) உத்திரமேரூர், உசிலம்பட்டி, மேட்டூர், கீழ்பென்னாத்தூர், கலசப்பாக்கம், தாராபுரம், பென்னாகரம், கீழ்வேளூர், சேந்தமங்கலம், தாம்பரம், குறிஞ்சிப்பாடி, சேலம்-ஆத்தூர், கும்பகோணம், மேலூர், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல்-ஆத்தூர், குளச்சல், மொடக்குறிச்சி, பண்ருட்டி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 22 சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள் ரூபாய் 66 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் ஆரோக்கியமான, சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை ஏற்படுத்துவதையும் சமூகத்தில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி கலாச்சாரத்தை வளர்ப்பதையும் அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

அதன் அடிப்படையில், 2024-25 ஆம் நிதி ஆண்டில், 22 சட்டமன்றத் தொகுதிகளில் ரூபாய் 66 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்கங்கள் அமைக்கப்படும்.

4. இந்தியாவில் முதன்முறையாக தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், மேலக்கோட்டையூர் அருகில் SDAT பிரத்யேக ஒலிம்பிக் Bicycle Motocross (BMX) ஓடுபாதை ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டைச் சார்ந்த Cycling விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளின் விளையாட்டுத் திறனை மென்மேலும் வளர்த்து ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் நோக்கில், இந்தியாவில் முதன்முறையாக ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், மேலக்கோட்டையூர் அருகில் SDAT பிரத்யேக ஒலிம்பிக் Bicycle Motocross (BMX) ஓடுபாதை அமைக்கப்படும்.

5. SDAT நிர்வாகத்தின்கீழ் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகங்கள் மற்றும் விளையாட்டு அரங்கங்கள் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டரங்கங்கள் பல்வேறு நிலையிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்திடவும், அன்றாட பயிற்சிகள் மற்றும் பயிற்சி முகாம்கள் நடத்திடவும் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், தற்போதுள்ள விளையாட்டரங்கங்களில் பராமரிப்புப் பணிகள் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

6. கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழர் பாரம்பரிய தற்காப்பு கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் புதியதாக அமைக்கப்படும்.

களரி, அடிமுறை, சிலம்பம் என பல்வேறு பெயர்களில் வழங்கப்பட்டு வரும் தென் தமிழ்நாட்டின் பழமையான பாரம்பரிய தற்காப்பு கலைகளும் அவற்றின் உட்பிரிவுகளான சுவடுமுறை, மல்யுத்தம், குத்துவரிசை, அடிதடை, வர்மம் முறைகள் போன்ற அரிய கலைகளை அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்கும் சீரிய நோக்கில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழர் பாரம்பரிய தற்காப்பு கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் புதியதாக அமைக்கப்படும்.

7. மதுரை மாவட்டத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஒலிம்பிக் அகாடமியில் Diving Pool-உடன் கூடிய ஒலிம்பிக் தரத்திலான நீச்சல் குளம் மற்றும் கரூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் புதிய நீச்சல் குளம் அமைக்கப்படும்.

சென்னை, வேளச்சேரியில் உள்ள SDAT AGB வளாகத்தில் Diving Pool-உடன் கூடிய ஒலிம்பிக் தரத்திலான நீச்சல் குளம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வசதியினை தென் தமிழ்நாட்டைச் சார்ந்த நீச்சல் வீரர், வீராங்கனைகளும் பயன்படுத்தி சர்வதேச அளவிலான நீச்சல் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் Diving Pool-உடன் கூடிய ஒலிம்பிக் தரத்திலான நீச்சல் குளம் மற்றும் கரூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் புதிய நீச்சல் குளம் அமைக்கப்படும்.

8. அனைத்து மாவட்ட விளையாட்டு வளாகங்களில் உள்ள உடற்பயிற்சிக் கூடங்கள் குளிர்சாதன வசதிகளுடன் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கட்டுப்பாட்டில் உள்ள விளையாட்டரங்கங்களில் அமைக்கப்பட்டுள்ள உடற்பயிற்சிக் கூடங்களில் பயிற்சி பெறும் மாணவ மாணவியர், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தற்போது பயன்பாட்டில் உள்ள உடற்பயிற்சிக் கூடங்கள் குளிர்சாதன வசதிகளுடன் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

தொடர்ச்சி 8- ஆம் பக்கம்